# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

**மானியக் கோரிக்கை எண். 9**

## அறிவிப்புகள்
## 2014–2015

**திரு. எஸ். அப்துல் ரஹீம்**
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்
நலத்துறை அமைச்சர்

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## புதிய அறிவிப்புகள் 2014–15

### 1. விடுதி காப்பாளர் / காப்பாளினிகளுக்கு பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள அதிகாரம் வழங்குதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்காக செயல்பட்டு வரும் 1305 விடுதிகளில் அவசர பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள விடுதி காப்பாளர்/ காப்பாளினிகளுக்கு அதிகாரம் வழங்கி ஓர் விடுதிக்கு ஓராண்டிற்கு ரூ.15,000 வீதம் மொத்தம் 1 கோடியே 95 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

## 2. புதிதாக தொழிற்கல்லூரி விடுதிகள் துவங்குதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, தொழிற்கல்வி **(Professional Course)** பயிலும் மாணவ, மாணவியரின் நலனுக்காக மாநகரங்கள் மற்றும் மாவட்ட தலைநகரங்களில் 5 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள், 3 மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள், 1 சீர்மரபினர் நல விடுதி மற்றும் 1 சிறுபான்மையினர் நல விடுதி என மொத்தம் 10 புதிய தொழிற் கல்லூரி விடுதிகள் 1000 மாணவ, மாணவியர் பயன் பெறும் வகையில் 2 கோடியே 81 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் துவங்கப்படும்.

## 3. மாணவர்களை 100 விழுக்காடு தேர்ச்சி பெறச் செய்யும் கள்ளர் சீரமைப்புப் பள்ளி ஆசிரியர்களுக்கு பரிசுத் தொகை வழங்குதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் இயங்கி வரும் 54 கள்ளர் சீரமைப்பு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் ஒவ்வொரு பாடப் பிரிவிலும் மாணவ, மாணவியரை 100 விழுக்காடு தேர்ச்சி பெறச் செய்யும் முதுகலைப் பட்டதாரி மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு தலா ரூ.5,000 பரிசுத் தொகையாக மொத்தம் 10 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

## 4. தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு மானியம் வழங்குதல்

தமிழ்நாடு வக்ஃப் வாரிய அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டியது தொடர்பாக மத்திய வக்ஃப் கழகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய கடன் தொகையான 48 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாயினை மத்திய வக்ஃப் கழகத்திற்கு திருப்பி செலுத்திட ஏதுவாக **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, இத்தொகை தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு மானியமாக வழங்கப்படும்.

## 5. சிறுபான்மையினர் விடுதி மாணவியருக்கு பரிசுகள் வழங்குதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, சிறுபான்மையின மாணவியர் விடுதிகளில் தங்கிப் பயின்று 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் சிறுபான்மையின மாணவியருக்கு முதல் பரிசாக ரூ.10,000–மும், இரண்டாம் பரிசாக ரூ.7,000–மும் மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.5000–மும் என மொத்தம் 44 ஆயிரம் ரூபாய் செலவில் பரிசுகள் வழங்கப்படும்.

## 6. விடுதிகளில் பணிபுரியும் சமையலர் / உதவி சமையலர்களுக்கு பணியிடை பயிற்சி வழங்குதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்காக செயல்பட்டு வரும் விடுதிகளில் பணிபுரியும் 1000 சமையலர்/ உதவி சமையலர்களுக்கு ரூபாய் 80 இலட்சம் செலவில் பணியிடை பயிற்சி வழங்கப்படும்.

## 7. கல்வி உதவித் தொகை திட்டங்களுக்கான பணியிடங்கள் மறு சீரமைப்பு

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கான கல்வி உதவித் தொகை திட்டங்களுக்கு தற்போது ஆண்டிற்கு நான்கு மாத காலங்களுக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள பருவ கால பணியிடங்களான **32** வட்டாட்சியர், **32** உதவியாளர் மற்றும் **32** தட்டச்சர் பணியிடங்களுக்குப் பதிலாக ஒரு மாவட்டத்திற்கு ஒரு உதவியாளர் பணியிடம் வீதம் **32** உதவியாளர் பணியிடங்களும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககங்களுக்கு தலா ஒரு கணினி பகுப்பாய்வாளர் பணியிடங்கள் வீதம் இரு கணினி பகுப்பாய்வாளர் பணியிடங்களும் **(Computer Programmer)** என மொத்தம் **34** முறையான பணியிடங்கள் கூடுதல் செலவினம் இல்லாமல் ஏற்படுத்தப்படும்.

## 8. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு கணினிகள் வழங்குதல்

மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் பிரமலைக் கள்ளர் வகுப்பினரின் நலனுக்காக 289 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் புதிதாக தரம் உயர்த்தப்பட்ட 8 கள்ளர் சீரமைப்பு உயர்நிலைப் பள்ளிகளுக்கு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, ஒரு பள்ளிக்கு 5 கணினிகள் மற்றும் உபகரணங்கள் வீதம் 40 கணினிகள் மற்றும் உபகரணங்கள் 22 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

## 9. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககத்திற்கு ஈப்பு வழங்குதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககத்திற்கு ஓட்டுநர் பணியிடத்துடன் ஒரு ஈப்பு **(Jeep) 9** இலட்சத்து **12** ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**எஸ். அப்துல் ரஹீம்**
**பிற்படுத்தப்பட்டோர் மற்றும்**
**சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர்**